**MCOP NO:804/2022** **DATE: 30.07.2026**

ம.சா : 2

பெயர் : திரு. முத்துகுமார்

த/பெ : திரு. முனியாண்டி

வயது : 49

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 30.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் கண்ணுற்ற சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 16–ஐ தாக்கல் செய்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. பொதுவாக ஒரு வாகனத்தை முந்தி செல்லும்போது அந்த வாகனத்தில் வலது புறமாகத்தான் முந்திச்செல்ல வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனத்தை இடது புறமாக முந்தி செல்லும்போது விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் பார்க்காத விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.